### FCRA சட்டம் சிறுபான்மையினரை மட்டுமல்லாமல், அவர்களால் நடத்தப்படும்

# மருத்துவமனைகள் - கல்வி நிறுவனங்களை நம்பியுள்ளோரையும் பாதிக்கும்!

## மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. தகவல்!

சென்னை,மே 3-

FCRA சட்டம் சிறுபான்மையினரை பாதிப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களால் நடத்தப்படும் மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்களை நம்பியிருக்கும் அனைவரையும் மோசமாகப் பாதிக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினரும், மூத்த வழக்கறிஞருமான பி.வில்சன் தெரிவித்துள்ளார்.



புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனின் 136வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வெளிநாட்டு நிதியுதவி ஒழுங்குமுறை திருத்த மசோதா - 2026 தொடர்பான அறிதல் அரங்கம் நிகழ்வில் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் வில்சன் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்.

ஒன்றிய அரசால் முன்மொழியப்பட்டுள்ள FCRA சட்டம், மிகவும் கொடூரமானது என்றும், இது சிவில் சமூகத்தின் மீது அளவுக்கு அதிகமான கட்டுப்பாடுகளை விதிப்பதுடன், வெளிநாட்டு நிதி ஆதாரங்களைத் தடுத்து, ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் வகையில் அமைந்துள்ளது என்றும் வில்சன் தெரிவித்தார்.

இந்தச் சட்டமானது சிறுபான்மையினரை பாதிப்பதோடு மட்டுமல்லாமல், உழைக்கும் வர்க்கத்தினர், பின்தங்கிய சமூகங்கள் மற்றும் இத்தகைய அமைப்புகளால் நடத்தப்படும் மருத்துவமனைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட அத்தியாவசியச் சேவைகளை நம்பியிருக்கும் சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினரையும் மோசமாகப் பாதிக்கும் என்றும் தி.மு.க. எம்.பி. வில்சன் கூறினார்.

### கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவர்

# தயாநிதி மாறன் எம்.பி. மாமனார் ராமரத்னம் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



சென்னை, மே 3 -

ஒன்றிய முன்னாள் அமைச்சர், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினரும் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன் அவர்களின் மாமனார் ராமரத்னம் அவர்கள் 30.04.2026 அன்று இயற்கையெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

ஒன்றிய முன்னாள் அமைச்சரும், கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் அவர்களின் மாமனார் எஸ்.ராமரத்னம் அவர்கள் உடல்நலக் குறைவால் 30.4.2026 - வியாழக்கிழமை அன்று மறைவுற்றார். அவருக்கு வயது 89.

செய்தியறிந்ததும் கழக முன்னணியினர், தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த ராமரத்னம் அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் நேற்று முன்தினம் (01.05.26 வெள்ளி) பகல் 12.00 மணியளவில், ஆழ்வார்பேட்டை, 36, கஸ்தூரி ரங்கன் சாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றன.



மே 1 உழைப்பாளர்கள் தினத்தை திருப்பூர் கிழக்கு மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதி வெள்ளகோவிலில் கழக துணை பொதுச் செயலாளர், அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொ.மு.ச. கொடியேற்றி இனிப்புகளை வழங்கினார். இதில் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன் உள்பட மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் தொழிற்சங்கங்களைச் சார்ந்த தோழர்கள், கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

# திருச்சி தெற்கு மாவட்டத்தில் வாக்கு எண்ணும் முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் !

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

திருச்சி, மே 3-

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருச்சி தெற்கு மாவட்டத்தில் உள்ள திருவெறும்பூர் திருச்சி கிழக்கு மணப்பாறை ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளில் வாக்கு எண்ணும் முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (03.05.2026 - ஞாயிற்றுக்கிழமை) கீழ்க்கண்ட விவரப்படி நடைபெற உள்ளது.

திருச்சி தெற்கு மாவட்ட வாக்கு எண்ணும் முகவர்கள் கூட்டம்,

காலை 7.00 மணிக்கு திருவெறும்பூர் தொகுதி காட்டூர் தேர்தல் அலுவலகம்,

காலை 9.00 திருச்சி கிழக்கு தொகுதி மாவட்ட அலுவலகம்,

காலை 11.00 மணிக்கு மணப்பாறை தொகுதி



மதுரை ரோடு தேர்தல் அலுவலகம்,

இக்கூட்டத்தில் மாநில,மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், வாக்கு எண்ணும் முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியில் சாதனை!

# இந்தியாவை மட்டுமல்ல; இனி தெற்காசியாவையே தமிழ்நாடு வழிநடத்தும்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் முதல்வருக்குப் பாராட்டு!

**சென்னை, மே 3 -**

**தமிழ்நாடு நடப்பு நிதியாண்டில் இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சி யில் 10.83 சதவிகிதம் என்ற சாதனையை பதிவு செய்துள்ளது. முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தியாவை மட்டுமல்ல; இனி தெற்காசியாவையே தமிழ்நாடு வழிநடத்தும் என கூறி யுள்ளதாக ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.**



தினகரன்

ஏப்ரல் 30, 2026 வியாழக்கிழமை

தட்டி தூக்கும் தமிழ்நாடு...!

தமிழ்நாட்டின் பொருளாதாரம் கடந்த சில ஆண்டுகளாக மிகச்சிறப்பான முன்னேற்றத்தை கண்டு வரும் நிலையில், தற்போது வெளியாகியுள்ள புள்ளிவிவரங்கள் மாநிலத்தின் பொருளாதார வலிமையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளன. 2025-26ம் நிதியாண்டில் தமிழகம் 10.83% என்ற இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. இந்தியாவின் ஒட்டுமொத்த தேசிய சராசரி வளர்ச்சி விகிதமான 7.4 சதவீதத்தை ஒப்பிடுகையில், தமிழகத்தின் இந்த வளர்ச்சி விகிதம் குறிப்பிடத்தக்க வகையில் அதிகமாக உள்ளது. இது தேசிய சராசரியைவிட சுமார் 3.4% அதிகம் ஆகும்.

அது வருமாறு:-

தமிழ்நாட்டின் பொருளாதாரம் கடந்த சில ஆண்டுகளாக மிகச்சிறப்பான முன்னேற்றத்தை கண்டு வரும் நிலையில், தற்போது வெளியாகியுள்ள புள்ளி விவரங்கள் மாநிலத்தின்பொருளாதார வலிமையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளன. 2025-2026ம் நிதியாண்டில் தமிழகம் 10.83% என்ற இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. இந்தியாவின் ஒட்டுமொத்த தேசிய சராசரி வளர்ச்சி விகிதமான 7.4 சதவீதத்தை ஒப்பிடுகையில், தமிழகத்தின் இந்த வளர்ச்சி விகிதம் குறிப்பிடத் தக்க வகையில் அதிகமாக உள்ளது. இது தேசிய சராசரியைவிட சுமார் 3.4% அதிகம் ஆகும்.

கடந்த 2024-2025ம் நிதியாண்டில் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி 11.19 சதவீதமாக இருந்தது. தற்போது, 2025-2026ம் நிதியாண்டிலும் 10.83% வளர்ச்சியை எட்டியிருப்பதன் மூலம், தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக தமிழகம் இரட்டை இலக்க வளர்ச்சியை பதிவுசெய்து வரலாற்று சாதனை படைத்துள்ளது. ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் இதை வெளியிட்டுள்ளது. 2025-2026ம் நிதியாண்டில் இந்தியாவிலேயே மிக உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை பதிவு செய்த மாநிலமாக தமிழ்நாடு உள்ளது.

தமிழகத்தின் இந்த அதிரடி வளர்ச்சிக்கு தொழில் துறை, சேவை துறை மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு ஆகிய மூன்றில் ஏற்பட்ட முன்னேற்றமே முக்கிய காரணம். உலகளாவிய முதலீட்டாளர்கள் மாநாடுகள் மற்றும் மாநில அரசின் தொடர்ச்சியான முயற்சிகளால் ஈர்க்கப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (FDI) உற்பத்தி துறையை வலுப்படுத்தி யுள்ளன. ஓசூர் மற்றும் சென்னை பகுதிகளில் மின்சார வாகனங்கள் மற்றும் மின்னணு உதிரிபாகங்கள் தயாரிப்பு நிறுவனங்களின் விரிவாக்கம் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தை 2030ம் ஆண்டுக் குள் ‘ஒரு டிரில்லியன் டாலர்’ பொருளாதாரமாக மாற்றும் இலக்கை எட்டுவதற்கு ஆண்டுதோறும் 10 சதவீதத்திற்கும் அதிகமான வளர்ச்சி விகிதம் அவசியமானது. இரட்டை இலக்க வளர்ச்சி முடிவுகள், தமிழ்நாடு அரசு சரியான பாதையில் பயணிப்பதை உறுதிப் படுத்துகிறது.

இந்த வளர்ச்சி விகிதம் வரும் ஆண்டுகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், தனிநபர் வருமானத்தை அதிகரிப்பதிலும் பெரும் பங்காற்றும்.

குறிப்பாக, இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சி, சென்னையை மட்டுமே நம்பியிருந்த நிலையை மாற்றி, மாநிலம் தழுவிய சமமான பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளது. தேசிய அளவில் நிலவும் பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும், தமிழ்நாடு காட்டியுள்ள இந்த துரித வளர்ச்சி, மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்னுதாரணமாக அமைந்துள்ளது. ஒன்றிய அமைச்சகத்தின் முழுமையான தரவுகள் வெளியான பிறகு, தேசிய பொருளாதார வரைபடத்தில் தமிழகத்தின் இடம் இன்னும் துல்லியமாக தெரியவரும்.

இதுபற்றி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “நாங்கள் மூன்று ஆண்டுகள் அடித்தளம் அமைத்து, தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் இரட்டை இலக்க வளர்ச்சியை வழங்கினோம். தமிழக மக்களே இந்த முன்னேற்றத்திற்கு காரணம். உங்கள் துணையோடு இன்னும் பல உயரங்களை அடைவது உறுதி. இது வெறும் தொடக்கம்தான். உங்கள் ஆதரவுடன், இந்த வளர்ச்சி மேலும் வேகமெடுக்கும். இந்தியாவை மட்டுமல்ல, இனி தெற்காசியாவை தமிழ்நாடு வழிநடத்தும்” என்று தனது சமூக வலைதள பதிவில் தெரிவித்துள்ளார். சபாஷ் தமிழ்நாடு.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 2026–2027 ஆம் ஆண்டு

# விளையாட்டு விடுதி மாணவ /மாணவியர்கள் சேர்க்கை!

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அறிவிப்பு!

சென்னை, மே 3-

பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் விளையாட்டுத் துறையில் சாதனைகள் படைப்பதற்கு ஏற்ப, அறிவியல் பூர்வமான விளையாட்டு பயிற்சி, தங்குமிட வசதி மற்றும் சத்தான உணவுடன் கூடிய விளையாட்டு விடுதிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் 28 இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

இவ்விளையாட்டு விடுதி சேர்க்கைக்கான விண்ணப்பப்படிவம் 08.04.2026 முதல் www.sdat.tn.gov.in என்ற இணைய தள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது, விளையாட்டு விடுதியில் சேர விருப்பமுள்ள 6, 7, 8, 9 மற்றும் 11-ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகள் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம். ஆன்லைன் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து பதிவு ஏற்றம் செய்வதற்கான கடைசி நாள்: 06.05.2026 அன்று மாலை 6.00 மணி ஆகும். தேர்வுக்கு ஆன்லைன் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். விளையாட்டு விடுதியில் சேர விரும்பும் மாணவ / மாணவியருக்கான மாவட்ட அளவிலான தேர்வுப் போட்டிகள் வருகின்ற 07.05.2026 அன்று காலை 7.00 மணியளவில் மாணவர்களுக்கும், 08.05.2026 அன்று காலை 7.00 மணியளவில் மாணவிகளுக்கும் கீழ்க்காணும் விவரப்படி நடைபெற இருப்பதால் ஆன்லைனில் விண்ணப்பித்தவர்கள் தவறாது கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதற்கான தகவல்கள் குறுஞ்செய்தி, வாட்ஸ்ஆப் மூலமாக உரியவர்களுக்கு தெரிவிக்கப்படும்.

காலை 7.00 மணி முதல் 07.05.2026 அன்று மாணவர்களுக்கான போட்டிகளும் மற்றும் 08.05.2026 அன்று மாணவியர்களுக்கான மாவட்ட அளவிலான தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, கபாடி, கையுந்துபந்து, கிரிக்கெட் (மாணவர்கள்), கைப்பந்து, ஆகிய மாவட்ட அளவிலான போட்டிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் அந்தந்த மாவட்ட விளையாட்டரங்கங்களில் நடைபெறும்.

மாவட்ட அளவிலான தேர்வில் சிறப்பாக செயல்பட்டவர்கள் மாநில அளவிலான போட்டிக்கு தகுதி பெறுவர். அதன் விவரம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் www.sdat.tn.gov.in எனும் அதிகாரபூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும்.

மாவட்ட அளவிலான தேர்வுகளுடன் கூடுதலாக, குறிப்பிட்ட விளையாட்டுப் போட்டிகளுக்கான நேரடி மாநில அளவிலான தேர்வுகள் 12.05.2026 அன்று காலை 7:00 மணி முதல் தமிழ்நாடு முழுவதும் நடைபெறவிருக்கின்றது. அந்த வகையில், சென்னை ஜவஹர்லால் நேரு மைதானத்தில் வாள்வீச்சு, ஜூடோ மற்றும் குத்துச்சண்டை (மாணவர்கள்) போட்டிகளும், சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் குத்துச்சண்டை (மாணவிகள்) மற்றும் ஸ்குவாஷ் (மாணவர்கள்) போட்டிகளும் நடைபெறும். தஞ்சாவூர் அன்னை சத்யா மைதானத்தில் பளுதூக்குதல், திருச்சி அண்ணா மைதானத்தில் வுஷு (மாணவர்கள்), சென்னை வேளச்சேரி AGB வளாகத்தில் நீச்சல், கடலூர் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் மல்யுத்தம் (மாணவர்கள்), கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு மைதானத்தில் டேக்வாண்டோ மற்றும் விழுப்புரம் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் மல்லர்கம்பம் ஆகிய போட்டிகளும் நடைபெறும்.

தேர்வு போட்டியில் கலந்து கொள்ள வருகின்றவர்களுக்கு தங்குமிட வசதி, பயணப்படி மற்றும் தினப்படி வழங்கப்படமாட்டாது. ஆன்லைன் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் மற்ற விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும். விருப்பமுள்ள அனைவரும் விளையாட்டு விடுதி தேர்வு போட்டியில் கலந்துக்கொண்டு பயனடையுமாறு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.



மே1 தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கோவை வடக்கு மாவட்டம், செல்வபுரம் பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு கழகத்தினர் மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினர். இதில் தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் என்.ஆர்.கார்த்திகேயன், பகுதி கழக பொறுப்பாளர் கேபிள் மணி உள்பட கழக நிர்வாகிகள், அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### வேகமெடுக்கும்

# சைதாப்பேட்டை - தேனாம்பேட்டை இரும்பு மேம்பாலப் பணிகள்!

## விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு வரும் நிலையில் பணிகள் தீவிரம்!

சென்னை, மே 3-

சென்னை சைதாப்பேட்டை தேனாம்பேட்டை இரும்பு மேம்பால பணிகள் விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு வரும் நிலையில், பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

அண்ணாசாலையில் தேனாம்பேட்டை - சைதாப்பேட்டை இடையே 621 கோடி ரூபாய் செலவில் 3.2 கிலோ மீட்டர் நீளத்துக்கு நான்கு வழிச்சாலையாக உயர்மட்ட இரும்பு பாலம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. ஏற்கனவே, இந்த வழியில் மெட்ரோ சுரங்கப்பாதை உள்ளதால்,



அதற்கு எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் மேம்பால பணிகள் கட்டப்பட்டு வருகிறது. வழக்கமான பாலங்கள் கான்கிரீட்டில் கட்டப்படும்.

ஆனால், இந்த பாலம் இரும்பு தூண்களால், மெட்ரோ சுரங்கத்துக்கு மேலே அமைக்கப்படுகிறது. இரும்புத் தூண்கள் தொழிற்சாலையிலேயே தயார் செய்யப்பட்டு, கட்டுமான இடத்திற்கு கொண்டு வரப்பட்டு பொருத்தப்படுகின்றன. இந்த மேம்பாலத்தில் வாகனங்கள் செல்லும்போது அதிர்வு ஏற்படாமல் இருக்கவும், சுரங்கப்பாதைக்கு பாதிப்பும் ஏற்படாத வகையிலும் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், மேம்பாலத்தின் பணிகள் இரவு, பகலாக மும்முரமாக நடைபெற்று வருகின்றது. மேம்பாலத்தில் தார் சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றது. சைதாப்பேட்டையில் பாலம் தொடங்கும் இடத்தில் இருந்து சிஐடி காலனி வரை இந்த பணிகள் நிறைவடைந் துள்ளது. மீதமுள்ள பணிகள் அனைத்தும் விரைவாக முடிக்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.